[1972 ஆகஸ்ட் 19

* 190 வினு—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

குடும்பநலத் திட்டப் பணிகளை மதிப்பிட மாநில அளவில் மதிப்பீட்டுக்குழு ஏதேனும் செயல்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, சென்ஸஸ் கணக்குப்படி 51—61 அதிகரிப்பைக் காட்டிலும் 61—71-ல் மக்கள் தொகை அதிகரித்திருக்கிறது. ஆகவே ஃபாமிலி பிளானிங் மெதட்ஸ் தீவிரப்படுத்தப்படவேண்டுமா, மக்கள் தொகையை கட்டுப்படுத்துவது பற்றி மேலும் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 51—61-ல் இருந்ததைவிட விகிதாசாரக் கணக்குப்படி பார்த்தால் 61—71-இல் குறைந்திருக்கிறதே தவிர கூடி இருப்பதாகத் தெரியவில்லை. பர்சென்டேஜ் பிரபபோர்ஷன்படி பார்த்தால், ஆயிரத்திற்கு இத்தனை பேர் என்ற கணக்குப்படி பார்த்தால் இறப்பு விகிதம் குறைந்த காரணத்தினுல் பிறப்பு விகிதத்தினுடைய வேகத்தால் ஏறுகிற மக்கள் தொகை அதிகமாக வாய்ப்பிருக்கிறது. ஏனென்றால் 51–61-ல் இறப்பு விகிதம் எவ்வளவு இருந்ததோ அதை விட 61–71-ல் இறப்பு விகிதம் மிகவும் குறைவு பெற்ற காரணத்தினுல், மக்கள் தொகை அதிகமாயிருக்கிறது. எனவே, இந்த குடும்ப நல திட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவதற்கு நியாயம் இருக்கிறது.

Seasonal conditions in districts.

* 191 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(a) whether it is a fact that the Board of Revenue has received reports of adverse seasonal conditions in the districts during April and May 1972; and

(b) if so, the details thereof?

1972 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) பாதகமான பருவ நிலைகளினால் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிக்க எடுக்கவேண்டிய துயர்தணிப்பு நடவடிக்கைகள் பற்றிக் கருத்துத் தெரிவித்து செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, சேலம் ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து வருவாய்த்துறை வாரியத்திற்கு அறிக்கைகள் வந்தன. ஆனால், பின்னர், அந்த மாவட்டங்களில் நல்ல மழை பெய்ததால், நிலைமை கணிசமான அளவுக்குச் சீரடைந்தது. எனவே, அதுபற்றி மேலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

THIRU N. DENNIS : Sir, may I know from the Hon. Minister whether Government have set up any Research Bodies to forecast such eventualities :

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது பருவ மழை தவறுவதால் ஏற்படக்கூடிய ஒன்று. அதனால் ரிசர்ச் பாடி என்று ஒன்று வைப்பதற்கில்லை. எப்போது நிலைமையில் பாதகம் ஏற்படுகிறதோ அப்போது அந்த நிலைமைகளைப் பரிசீலித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether any report has been sent by the District Collector of Dharmapuri about the drought condition prevailing at present in Dharmapuri District?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தமிழ் நாடு முழுவதும் உள்ள நிலைமையைப் பரிசீலிப்பதற்கு வாரிய அங்கத்தினர்கள் ஒருவரை அனுப்பியிருக்கிறோம். அந்தக் குழு அறிக்கை வந்ததற்குப் பிறகு அந்த அறிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2, 3 மாதங்களாக மதுரை மாவட்டம் போன்ற பகுதிகளில் மழையின்மையால், கிணறுகளில் தண்ணீர் வற்றி, ஆடிமாதப் பட்டத்தில் விதைக்க முடியாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். அதன் காரணமாக, மக்கள் அந்தப் பகுதிகளைவிட்டு வெளியேறுகிறார்கள். அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, எங்கெங்கு குடி தண்ணீர் நிலைமை மோசமாக இருக்கிறதோ, அங்கங்கு இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதுகுறித்து

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்களுக்குத் தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. பொதுவாக, வறட்சி நிலைமை பற்றிப் பரிசீலித்து அறிக்கை அனுப்ப வேண்டுமாய் வாரிய உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். விரைவிலே அந்த அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the peculiar condition in the Dharmapuri district is that it is under the spell of the south-west monsoon. The monsoon suddenly appears and pours showers. These showers tempt ryots to sow seeds and then there are no rains. This is what is happening there for the last so many decades. So, may I know whether he will arrange for special investigation and see that frequent droughts are stopped?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 4 நாட்களுக்கு முன்பு தர்மபுரி மாவட்டத்திற்கு நான் சென்றிருந்த பொழுது மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற நிலைமை இல்லை என்பதைப் பார்த்தேன். ஆங்காங்கு சிறுசிறு பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவைபற்றி, அங்கு சென்றிருந்த வாரிய உறுப்பினர் அவர்களுடைய அறிக்கை வந்த பிறகுதான் முடிவு எடுக்க முடியும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பருவமழை தவறியதுகுறித்து போர்டு ஆப் ரெவினியூக்கு எழுதி இருப்பதாக வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத கஷ்டமான நிலைமை அங்கு இருக்கிறது. வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அப்பகுதிக்கு ஏதாவது நிதி உதவி செய்ய அரசாங்கம் முன் வந்திருக்கிறதா? ஆமெனில் அதன் விவரம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, சிறிது காலத்திற்கு முன்பு, வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை அனுப்பினார்கள். ஆனால், அதன்பிறகு பருவ மழை பெய்த காரணத்தினால், நிலைமை சீரடைந்து இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை. பொதுவாக, வறட்சி நிலைமைபற்றி அறிக்கை அனுப்புமாறு வாரிய உறுப்பினர்களைக் கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்தபிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.